242785

57

10-5-1993
SRI LANKA

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கு நோய்கள் சட்டம்

---

*[1992, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1992, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 2.40** **தபாற் செலவு: ரூபா 1.55**

## 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கு நோய்கள் சட்டம்

[1992, நவெம்பர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ.68/84

1995

விலங்குகளின் தொடுநோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும், தடுப்பதற்கும், விலங்குகளினதும் விலங்கு உற்பத்திப் பொருட்களினதும் அத்துடன் விலங்கு வைத்திய அவுடதங்கள், விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றினதும் இறக்குமதியையும் ஏற்றுமதியையும் கட்டுப்படுத்துவதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, விலங்கு நோய்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

### பாகம் I

### சட்டத்தினை நிருவகித்தல்

2. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, விலங்கின உற்பத்தி, மற்றும் சுகாதாரம் என்பவற்றுக்கான பணிப்பாளராக இருப்பதற்கு அல்லது அவ்வாறு செயற்படுவதற்கு ஆளொருவர் நியமிக்கப்படலாம். அவர் (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) இச்சட்டத்தின் பொது நிருவாகத்திற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும். அலுவலர்களின் நியமனம்.

(2) விலங்கின உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர், 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு வைத்தியர்கள், தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட விலங்கு வைத்தியரொருவராக இருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய எண்ணிக்கையினரான விலங்கின உற்பத்தி சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர்களும் உதவிப் பணிப்பாளர்களும் அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதிலும் அவற்றிற்குப் பலனளிப்பதிலும் மேலே சொல்லப்பட்ட அலுவலர்களுக்கு உதவும் நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் நியமிக்கப்படலாம்.

(4) இச்சட்டத்தின்கீழ் பணிப்பாளருக்குள்ள ஏதேனும் தத்துவம் கடமை அல்லது பணி, பணிப்பாளரின் பணிப்பின்கீழ் எவரேனும் பிரதிப் பணிப்பாளரால் அல்லது உதவிப் பணிப்பாளரால் அல்லது பணிப்பாளரின் கைப்பட அவ்வாறு செய்வதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு அலுவலரால் பிரயோகிக்கப்படலாம், நிறைவேற்றப்படலாம் அல்லது புரியப்படலாம்.

2—ட 022623—1 370 (92/04)

## பாகம் II

### கட்டுப்பாடும் தடுத்தலும்

விலங்கின நோய்க ளைக் கட்டுப் படுத்துதல், தடுத்தல் என்பன தொடர்பில் பணிப்பாள ருக்குள்ள தத்துவங்கள்.

3. (1) ஏதேனும் விலங்கை இலங்கைக்குள்ளே கொண்டுவரும் ஒவ்வோராளும் அது அவ்வாறு கொண்டுவரப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் விலங்கில் ஏற்படும் ஏதேனும் நோயுள்ள நிலைபற்றி பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) ஏதேனும் நோயுற்ற விலங்கை அவரது உடைமையில் அல்லது அவரது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கின்ற ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஆளொருவர் தவிர்ந்த வேறு ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய விலங்கைத் தனியாகப் பிரித்துவைத்தல் வேண்டும் என்பதுடன் அவ்விலங்கு நோயுற்றுள்ளது என்ற நிகழ்வுபற்றி ஆகக்கிட்டவுள்ள விலங்கு வைத்தியருக்கு அறிவித்தல் கொடுத்தலும் வேண்டும். அந்த அலுவலர் உடனடியாக அத்தகைய நிகழ்வைப்பற்றி பணிப்பாளருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன் மீது, விலங்கைப் பீடித்துள்ள நோயின் தன்மையைத் தீர்மானிப்பதற்கும், நோய் ஏற்பட்ட வளவுகளுக்குள் அல்லது இடப்பரப்பிற்குள் அதனை அடைத்து வைப்பதற்கும் அத்துடன் நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு விசேட பணிப்புகளை வழங்கலாம்.

நோய் தொற்றிய வளவுகளுக்கு இலச்சினை யிடுதல்.

4. இதற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட (இதனைத்துப் பின்னர் 'குறித்துரைக்கப்பட்ட நோய்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் தொடுநோய் ஏற்பட்டுள்ளதெனத் தகவல் கிடைக்கப்பெற்றதன்மேல் அல்லது விலங்கு வைத்தியரொருவரால் செய்யப்பட்ட முறையீடுகளின்மேல் பணிப்பாளர், குறித்துரைக்கப்பட்ட நோய் பரவுவதை அல்லது அது பரவக்கூடிய சாத்தியக்கூறுகளைத் தடுப்பது அவசியம் என அவர் கருதினால் அவ்வாறு செய்வதற்கு இவ்விடயத்தைப்பற்றி நீதிவானுக்கு அறிவித்து எந்த வளவுக்குள் அத்தகைய விதித்துரைக்கப்பட்ட நோய் ஏற்பட்டுள்ளதோ அந்த நோய் தொற்றிய வளவுகளை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு இலச்சினையிடுவதற்கான பணிப்பொன்றுக்கும் விண்ணப்பிக்கலாம்; நீதிவான், விதித்துரைக்கப்பட்ட நோய் பரவுவதை அல்லது அது பரவக்கூடிய சாத்தியக்கூற்றைத் தடுப்பதற்கு அவ்வளவுகளுக்கு இலச்சினையிடுவது அவசியம் என அபிப்பிராயப்படின் அவர், அச்சூழ்நிலைகளில் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்பை வழங்குதல் வேண்டும்.

நோய் தொற்றிய இடப் பரப்பிற்கு இலச்சினையிடல்.

5. (1) பணிப்பாளர், அவ்வாறு செய்வது உகந்ததெனக் கருதினல், நோய் தொற்றிய எவையேனும் வளவுகளுக்கு இலச்சினையிடுவதற்கான பணிப்புகளைப் பெறுவதற்கு மேலதிகமாக, நோய் தொற்றிய வளவுகள் உட்பட ஏதேனும் இடப்பரப்பை, அவ்வளவுகளில் அல்லது அந்த இடப் பரப்பில் துலாம்பரமான ஓரிடத்தில் அவ்வாறு பயன்படும் அறிவித்த லொன்றை ஒட்டிவைப்பதன்மூலம் தற்காலிகமாக மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் நோய் தொற்றிய இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தலாம்.

(2) அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் நோய் தொற்றிய விலங்கின் இனத்தையும், குறித்துரைக்கப்பட்ட நோயின் தன்மையையும், அத்த கைய நோய் ஏற்பட்டுள்ள வளவுகள், இடப்பரப்பெல்லைகள் என்பவற்றை யும் அத்துடன் அத்தகைய கட்டளை எத்தேதியிலிருந்து பயனுறுதல் வேண்டுமோ அத்தேதியையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் கசெற்றில் வெளியிடப்படும் பின்னரான கட்டளை யொன்றின்மூலம் அத்தகைய காலப்பகுதியை ஆறு மாதங்களை விஞ் சாத மேலும் ஒரு காலப்பகுதிக்கு நீடிக்கலாம்.

(4) எவையேனும் வளவுகள் இலச்சினையிடப்படுமிடத்து அல்லது இடப்பரப்பொன்று நோய்தொற்றிய இடப்பரப்பொன்றாக வெளிப்படுத் தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய வளவுகள் அல்லது இடப்பரப்பு நோய் தொற்றிய தன்மையற்றது எனப் பணிப்பாளரால் ஆக்கப்பட்டுக் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையொன்றின்மூலம் வெளிப்படுத்தப் படும்வரை, ஏதேனும் விலங்கு, விலங்கின் சடலம் அல்லது சடலத்தின் ஏதேனும் பாகம் விலங்கின் ஏதேனும் கழிவுப்பொருள், விலங்கின் உற் பத்திப் பொருள், வைக்கோற்படுகை, புல், வைக்கோற்குவியல் அல்லது வேறு ஏதேனும் பொருள், விலங்கு வைத்தியரால் ஒப்பமிடப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றில்லாமல் அத்தகைய வளவுகளிலிருந்து அல்லது நிலப்பரப்பிலிருந்து அகற்றப்படுதலாகாது.

எல்லா விலங்கினப் போக்குவரத்துக்கும் வீதிகளை மூடுவதற்கான அதிகாரம்.

6. (1) ஏதேனும் வீதி அல்லது அதன் ஏதேனும் பாகம் தொற்று நோய் பரவிய இடப்பரப்பெனவும் 5 ஆம் பிரிவின்கீழான கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறன அத்தகைய விலங்கு இனங்களின் போக்கு வரத்துக்கு அது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு மூடப்படுதல் வேண்டும் எனவும் பணிப்பாளர் ஏதேனும் வீதியில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் துலாம்பரமான இடங்களில் அறிவித்தல்களை ஒட்டி விடுவதன்மூலம் அல்லது அவர் பொருத்தமானதெனக் கருதக் கூடியவாறன வேறு ஏதேனும் தகுந்தமுறையில் பிரகடனப்படுத்துவது பணிப்பாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று ஒட்டப்பட்டுள்ள விடத்து ஆளெவரும் போக்குவரத்து நோக்கங்களுக்காயினும் சரி வேறு வகையாயினுஞ்சரி அத்தகைய குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் போது அத்தகைய வீதி வழியாக அல்லது அதன் பாகத்தின் வழியாக அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விலங்கை எடுத்துச் செல்லுதல் ஆகாது.

(3) இப்பிரிவின் (1) ஆம் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக ஏதேனும் வீதியில் அல்லது அதன் பாகத்தில் பணிப்பாளர் நிர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய இடங்களில் தடைகளைப் போடுவித்தல் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் பொறுப்பாதல் வேண்டும்.

**தொற்று நோய் பரவிய இடப்பரப்புகளில் விலங்குகளுக்குத் தடுப்பு மருந்து கொடுத்தல்.**

7. (1) இடப்பரப்பொன்று, 5 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்றின்மூலம் தொற்றுநோய் பரவிய இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, கட்டளையில் தரப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட நோய்க்கு எதிராக அத்தகைய விலங்கிற்குத் தடுப்புமருந்து கொடுக்கும் நோக்கத்திற்கென, கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்ததும் அத்தகைய கட்டளை எந்த இடப்பரப்புத் தொடர்பிலானதோ அந்த இடப்பரப்பில் காணப்படுவதுமான விலங்கு ஒவ்வொன்றும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதியிலும் நேரத்திலும் அத்தகைய இடத்திற்கு அதன் சொந்தக்காரரால் கொண்டுவரப்படுதல் வேண்டுமென எழுத்திலான ஓர் அறிவித்தல்மூலம் தேவைப்படுத்துவது பணிப்பாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்று வழங்கப்பட்டுள்ளவிடத்து, அறிவித்தலில் விவரிக்கப்பட்ட இனங்களைச் சேர்ந்த விலங்கொன்றின் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

**தொற்று ஏற்பட்ட விலங்குகளையும் சடலங்களையும் பிடித்தல்.**

8. ஐந்தாம் பிரிவின்கீழான கட்டளையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட நோயின் தன்மையையும், அது பரவும் சாத்தியத்தையும் கருத்திற்கொண்டு, 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை தொடர்புறுத்துவதும், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புக்குள் காணப்படுவதும், நோயுற்ற விலங்குடன் அல்லது சடலத்துடன் தொடர்புக்கு வருவதுமான விலங்கின் இனத்தைச் சேர்ந்த ஏதேனும் விலங்கைப் பிடித்துத் தடுத்து நிறுத்தும்படி கட்டளையிடுதல் பணிப்பாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

**தொற்று ஏற்பட்ட அல்லது நோயுள்ள விலங்குடன் தொடர்புக்கு வந்த விலங்கை அழித்தலும் கையாண்டு தீர்த்தலும்.**

9. (1) பணிப்பாளரானவர், 8 ஆம் பிரிவின்கீழ் பிடித்து வைத்திருக்கப்படக்கூடிய அல்லது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கக்கூடிய விலங்கானது அழிக்கப்படுதல் வேண்டும் அல்லது கையாண்டு தீர்க்கப்படுதல் வேண்டும் என அபிப்பிராயப்பட்டால், பணிப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், அவ்விடயம்பற்றி நீதிவானுக்கு அறிக்கையிட்டு, விலங்கை அழித்து அதன் சடலத்தைக் கையாண்டு தீர்ப்பதற்கும் ஏதேனும் நோய் தொற்றிய பொருளை அழித்துக் கையுதிர்ப்பதற்குமான பணிப்பொன்றுக்காக விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன், நீதிவான் அத்தகைய அழித்தலும், கையாண்டு தீர்த்தலும் குறித்துரைக்கப்பட்ட நோயையும் அது பரவும் சாத்தியத்தையும் தடுப்பதற்கு உகந்தது என அபிப்பிராயப்பட்டால், அச்சூழ்நிலைகளில் பொருத்தமானதென அவர் கொள்ளக்கூடியவாறான அத்தகைய பணிப்பை, கொடுத்தல் வேண்டும்.

நீதிவானுக்கு அனுப்பப்படும் அறிக்கையானது எந்த விடயப்பொருள் பற்றிப் பணிப்பு நாடப்பட்டதோ அந்த விடயப்பொருள் பற்றிய போதுமான விபரங்களைத் தருவதாயும், விலங்கு வைத்தியரொருவரின் சான்றிதழொன்றினால் ஆதாரப்படுத்தப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ், கட்டளையிடப்பட்டதான விலங்கினை அழித்து, அதன் சடலத்தைக் கையாண்டு தீர்த்தலும், அத்துடன் ஏதேனும் தொற்று ஏற்பட்ட பொருளை அழித்தலும் அதனைக் கையாண்டு தீர்த்தலுமானது, விதித்துரைக்கப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட்டதென்பதை உறுதிப்படுத்துதல், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

**10.** பணிப்பாளர் குறித்துரைக்கப்பட்ட நோயின் தன்மையையும் அது பரவும் சாத்தியத்தையும் கருத்திற்கொண்டு, 5 ஆம் பிரிவின்கீழான கட்டளை தொடர்புறுத்துகின்றதானதும், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படும் இடப்பரப்பிற்குள் காணப்படுவதுமான விலங்கின் இனத்தின் ஏதேனும் விலங்கு உற்பத்திப் பொருட்களை கைப்பற்றும்படி கட்டளையிடுவது அவரது கடமையாதல் வேண்டும். *விலங்கு உற்பத்திப் பொருட்களைக் கைப்பற்றுதல்.*

**11.** (1) பணிப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், 10 ஆம் பிரிவின்கீழான கைப்பற்றுகை பற்றி நீதிவானுக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஏதேனும் விலங்கு உற்பத்திப் பொருட்களை அழித்துக் கையாண்டு தீர்ப்பதற்கான பணிப்பொன்றுக்காக விண்ணப்பித்தலும் வேண்டும். அத்துடன் நீதிவான் அத்தகைய அழித்தலும் கையாண்டு தீர்த்தலும் குறித்துரைக்கப்பட்ட நோயையும், அது பரவும் சாத்தியத்தையும் தடுப்பதற்கு உகந்தது என அபிப்பிராயப்பட்டால், அச்சூழ்நிலைகளில் அவர் பொருத்தமானதென எண்ணக்கூடியவாறான அத்தகைய பணிப்பை கொடுத்தல் வேண்டும். நீதிவானுக்குச் செய்யப்படும் அறிக்கையானது எந்த விடயப்பொருள் பற்றிப் பணிப்பு நாடப்படுகின்றதோ அந்த விடயப் பொருள் பற்றிய போதுமான விபரங்களைத் தருவதாக இருத்தல் வேண்டும். *விலங்கு உற்பத்திப் பொருட்களை அழித்தலும் கையாண்டு தீர்த்தலும்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அழிக்கப்படவேண்டும் எனக் கட்டளையிடப்பட்டதான ஏதேனும் விலங்கு உற்பத்திப் பொருள்கள், விதித்துரைக்கப்பட்டமுறையில் அழிக்கப்பட்டுக் கையாண்டு தீர்க்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரது கடமையாதல் வேண்டும்.

**12.** (1) குறித்துரைக்கப்பட்ட நோய் எதுவும் இடம்பெற்ற கட்டிடங்கள், பொறிகள் (அடைகாக்கும் கருவி) உட்பட எல்லா இடங்களும் விதித்துரைக்கப்பட்ட முறையிலும், விலங்கு வைத்தியரொருவரின் மேற்பார்வையின்கீழும் தொற்றுநீக்கஞ் செய்யப்படுதல் வேண்டும். *தொற்று நீக்குதல்.*

(2) தொற்று நீக்குதலானது, விதித்துரைக்கப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட்டதென்பதை உறுதிப்படுத்துவது விலங்கு வைத்தியரது கடமையாதல் வேண்டும்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் தத்துவங்கள்.

13. (1) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் —

(அ) பணிப்பாளருக்கான முன்னறிவித்தலின்பின்னர், இச்சட்டத்தின் கீழ், அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அவரது பணிகளை நிறைவேற்றுகையில் நாளில் எந்த நியாயமான நேரத்திலும், எவையேனும் வளவுகளுக்குள் நுழையலாம்;

(ஆ) இச்சட்டத்தின்கீழான தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றை பிரயோகித்தல், புரிதல் அத்துடன் நிறைவேற்றுதல் என்பனவற்றுடன் தொடர்புள்ள அல்லது அவற்றை மேம்படுத்துமுகமாக வேறேதேனும் செயலைச் செய்யலாம்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும் பணிப்பாளருக்கான முன்அறிவிப்பின்றி (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் செயலாற்றுமிடத்து, அவர் தாமதமின்றி அத்தகைய செயல்பற்றிப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய செயலை மேற்கொண்டமைக்கான காரணங்களை குறிப்பிடுதலும் வேண்டும்.

(3) ஆளெவரும், அதிகாரம்பெற்ற அலுவலரொருவர் இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழ், அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கும்படி செயலாற்றுகையில் முட்டுக்கட்டையிடுதலாகாது.

குறித்துரைக்கப்பட்ட நோயைக் கண்டறிவதற்காக விலங்குகளைச் சோதித்தல்.

14. (1) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், குறித்துரைக்கப்பட்ட நோய் எதுவும் ஏற்பட்டுள்ளதா என்பதைச் சோதித்துக் கண்டுபிடிக்கும் நோக்கத்திற்காக —

(அ) ஏதேனும் பண்ணை நிலத்துள், மாட்டுக்கொட்டிலுள், பறவைப் பண்ணை நிலத்துள், குஞ்சு பொரிக்கும் இடத்துள், அல்லது எந்த இடத்தில் ஏதேனும் விலங்கு வைத்திருக்கப்படுகின்றதோ அல்லது வளர்க்கப்படுகின்றதோ அல்லது ஏதேனும் விலங்கு உற்பத்திப் பொருள் வைத்திருக்கப்படுகின்றதோ அந்த வேறு இடமெதிலும் நுழையலாம்; அத்துடன்

(ஆ) குறித்துரைக்கப்பட்ட நோய் எதுவும் ஏற்பட்டுள்ளதா என்பதைச் சோதித்துக் கண்டுபிடிக்கும் நோக்கத்திற்காக அத்தகைய விலங்கின் அல்லது விலங்கு உற்பத்திப் பொருளின் சொந்தக்காரரை குறித்துரைக்கப்பட்டதொரு தேதியிலும், குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும், இடத்திலும் அதனைக் காண்பிக்குமாறு தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்படும் சோதனையொன்றில் நோயுற்றதாக எந்த விலங்கு காணப்படுகிறதோ அந்த விலங்கு ஒவ்வொன்றும் தொற்றுக்குட்பட்ட எல்லாப் பொருள்களுடனும் சேர்த்து அழிக்கப்பட்டுக் கையாண்டு தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அதற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) அத்தகைய விலங்கும் அத்துடன் தொற்று ஏற்பட்ட ஏதேனும் பொருளும் விதித்துரைக்கப்பட்ட முறையில் அழிக்கப்பட்டுக் கையாண்டு தீர்க்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்துவது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரது கடமையாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ், அழிக்கப்பட்டுக் கையாண்டு தீர்க்கப்படுதல் வேண்டும் என்று நீதிவான் பணிப்பொன்றைக் கொடுக்குமிடத்து, விடயத்தின் சூழ்நிலைகளில் அது நீதியானதும் ஒப்புரவானதுமென அவர் கருதினால், அவரால் விடுக்கப்பட்ட பணிப்பினால் பாதிக்கப்பட்டதிறத்தவருக்கு அவரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கொடுப்பனவொன்றைப் பணிப்பாளர் செய்தல் வேண்டுமென நீதிவான் கட்டளையிடுதல் வேண்டும்.

15. (1) பணிப்பாளர் பின்வருவனவற்றைத் தடைசெய்தல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :— **பண்ணை விலங்கையும் உற்பத்திப் பொருளையும் விற்பனை செய்தல்.**

(அ) பன்னிரண்டாம் பிரிவின்கீழ் தொற்றுநீக்கப்பட்டவையான எவையேனும் வளவுகளில், தொற்றுநீக்கஞ் செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாள் காலப் பகுதியொன்றுக்கு விலங்குகளையும், விலங்கு உற்பத்திப் பொருட்களையும் விற்பனை செய்தல் ;

(ஆ) தொற்று ஏற்பட்டுள்ள இடப்பரப்பிலிருக்கும் சந்தைகளில், விற்பனையிடங்களில், அத்துடன் வேறேதேனும் இடத்தில் நோயுற்ற விலங்குகளை விற்பனை செய்தலும் வெளிக்காட்டி வைத்தலும்.

(2) முறையே சிங்கள, தமிழ், அத்துடன் ஆங்கிலப் புதினத்தாள் ஒன்றில் வெளியிடுவதன் மூலமும், தொற்று ஏற்பட்ட இடப்பரப்பில் ஏதேனும் துலாம்பரமான இடத்திலான அறிவித்தலில் வெளிக்காட்டி வைப்பதன் மூலமும், (1) ஆம் உட்பிரிவின் கீழான அத்தகைய தடை பற்றிய அறிவிப்பானது பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படுதல் வேண்டும்.

16. (1) ஆள் எவரும் அவரால் அத்தகைய வளவுகளைப் பதிவு செய்வதற்கென விதித்துரைக்கப்பட்ட முறையில், எழுத்துமூலம் பணிப்பாளருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டு, அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றிருந்தாலன்றி, வளவுகள் எதையும் விலங்குச் சிகிச்சை நிலையம், விலங்குக் கூடம் அல்லது குஞ்சு பொரிக்கும் இடம் ஒன்றாகப் பயன்படுத்துதல் ஆகாது. **விலங்குச் சிகிச்சை நிலையம், குஞ்சு பொரிக்குமிடம் முதலியனவாக வளவுகளைப் பதிவு செய்தல்.**

(2) அத்தகைய வளவுகளின் சொந்தக்காரரினால் அல்லது வளவுகளிற்குப் பொறுப்பாக உள்ள ஆளினால் செய்யப்பட்ட எழுத்துமூலமான விண்ணப்பத்தின் மேல், அத்தகைய வளவுகள் அமைந்துள்ள

இடப்பரப்பில் உள்ள விலங்கு வைத்தியரால் கொடுக்கப்பட்ட சான்றிதழுடன் சேர்த்து அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும் செய்யப்படல் வேண்டும். அத்துடன் அத்தகைய சான்றிதழைக் கொடுக்க முன்னதாக அத்தகைய வளவுகளுக்குச் சென்று அதனைப் பரிசோதிப்பது விலங்கு வைத்தியரின் கடமையாதலும் வேண்டும்.

(3) அத்தகைய வளவுகளில் முறையான பணிகளையும், முகாமையையும் உறுதிப்படுத்துவதற்கு —

(i) போதுமான வசதிகள் ;

(ii) பாதுகாப்பு வழிவகைகள் ; அத்துடன்

(iii) பயிற்றப்பட்ட மற்றும் அனுபவம் வாய்ந்த ஆளணி ;

என்பன கிடைக்கக்கூடியதாயுள்ளமை தொடர்பான ஒரு கூற்றை (2) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழானது கொண்டிருத்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் (2) ஆம் உட்பிரிவின் கீழான விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டதன்மீது, விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென விலங்கு வைத்தியால் கொடுக்கப்பட்ட சான்றிதழுடன் அவர் திருப்திப்படுவாரானால் அவ் வளவுகளைப் பதிவு செய்தல் வேண்டும்.

(5) அவ்வாறு செய்யப்பட்ட பதிவானது, அத்தகைய பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குச் செல்லுபடியுடையதாயிருத்தல் வேண்டும் என்பதுடன், அதன் சார்பில் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது மீளப் புதுப்பிக்கற்பாலதாதலும் வேண்டும்.

(6) பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், அவர் அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதும் போதெல்லாம் அத்தகைய வளவுகளுக்குச் சென்று அங்கு பரிசோதனை நடாத்துவது சட்டமுறையானதாதல் வேண்டும்.

**விலங்கு வைத்திய அவுடதங்கள், விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றை உற்பத்தி செய்தலும் அதற்கான உரிமங்களை** வழங்குதலும்.

17. (1) ஆள் எவரும், பணிப்பாளரால் அதன் சார்பில் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் அதிகாரத்தின் கீழ் தவிர, இலங்கையில் ஏதேனும் விலங்கு வைத்திய அவுடதத்தை அல்லது விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்தல் ஆகாது.

(2) அத்தகைய உரிமத்தைப் பெறுவதற்கு விரும்புகின்ற ஒவ்வோர் ஆளும், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அதன் சார்பாக பணிப்பாளருக்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும். அவ் விண்ணப்பமானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விடயத்துக்கேற்றுப்போல விலங்கு வைத்திய அவுடதம் அல்லது விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருள் ஒவ்வொன்று தொடர்பாகவும் வெவ்வேறாகச் செய்யப்படுதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டதன்மேல், பணிப்பாளரானவர் —

(அ) (i) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது எனவும், அத்தகைய விண்ணப்பத்தில் அடங்கியுள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமெனவும்,

(ii) வளவுகளும், அத்தகைய உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட சாதனங்களும் விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு அமைவானவையாக இருக்கின்றன எனவும், அத்துடன்

(iii) அத்தகைய உற்பத்திக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் விதித்துரைக்கப்பட்ட பயிற்சியையும் அனுபவத்தையும் பெற்றுள்ளாரெனவும்,

திருப்திப்படுவாரானால் உரிமமொன்றை அவர் வழங்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) அவர் அவ்வாறு திருப்திப்படாவிடின், அத்தகைய விண்ணப்பத்தை நிராகரித்தல் வேண்டும்.

18. (1) பதினேழாம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்று முன்னதாகவே அது இல்லாதொழிக்கப்பட்டு அல்லது இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்தால் அன்றி வழங்கப்பட்ட தேதியில் இருந்து ஒரு வருடகாலத்திற்கு வலுவுடையதாக இருத்தல் வேண்டும். **உரிமத்தின் வலிதுடைமை.**

(2) சட்டத்தை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதியின் எவையேனும் ஏற்பாடுகளை உற்பத்தியாளர் மீறியுள்ளாரென பணிப்பாளர் கருதுவாரானால், பணிப்பாளரானவர், அவரால் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தை இல்லாதொழிக்கலாம் அல்லது இடைநிறுத்திவைக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான கட்டளை எதுவும் அத்தகைய கட்டளை ஏன் ஆக்கப்படக்கூடாது என்பதற்கு, அறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்திற்குள் காரணம் காட்டுமாறு உரிமம் பெற்றவருக்கு அறிவித்தல் கொடுத்த பின்னர் தவிரவும் அத்துடன், அத்தகைய காலப்பகுதிக்குள் காரணம் காட்டத் தவறுவதன் மீது அல்லது போதுமான காரணத்தை அவர் காட்டாது விடுவதன் மீது அல்லாமலும் உரிமம் பெற்றவருக்கு எதிராக ஆக்கப்படுதல் ஆகாது.

(4) பதினேழாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான விண்ணப்பத்தை நிராகரிப்பதன் மூலம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான உரிமம் ஒன்றினை இடைநிறுத்துவதன் அல்லது இல்லாதொழிப்பதன் மூலம் இடருற்றவரான எவரேனும் ஆள், விடயத்திற்கேற்றுற்போல் அத்தகைய நிராகரிப்பு, இடை நிறுத்தம் அல்லது இல்லாதொழிப்புக்கு எதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு, அத்தகைய ஆளுக்கு அத்தகைய முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் எழுத்துமூலமான மேன்முறையீடொன்றை முன்வைக்கலாம் என்பதுடன் செயலாளரானவர், அவருக்குச் செய்யப்பட்ட மேன்முறையீட்

டைக் கையாளுவதில் எந்தக் கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்
யப்பட்டதோ அந்தக் கட்டளையை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்த
லாம் அல்லது திருத்தலாம்.

(5) அத்தகைய மேன்முறையீட்டின் மீதான செயலாளரின் முடிபு
இறுதியானதும் முடிவானதுமானதாதல் வேண்டும்.

பொலிகாளைகள் அத்துடன் கருத்தரிக்கும் பசுக்கள் என்பன உரிமம் அளிக்கப்படுதல் வேண்டும்.

19. ஆள் எவரும், பணிப்பாளரால் வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ்
அன்றி —

(அ) இனப்பெருக்கத்திற்காக அதன் ஆண்கருவைச் சேர்த்தல், பதனி
டுதல் மற்றும் பயன்படுத்தல் ஆகிய நோக்கத்திற்காக ஒரு
பொலிகாளையை, அல்லது

(ஆ) கருப்பரிமாற்றத்திற்கென கருவைத்தரிக்கும் நோக்கத்திற்காக
கருத்தரிக்கும் பசு ஒன்றை வைத்திருத்தலோ அல்லது பரா
மரித்தலோ ஆகாது.

உரிமம் வழங்க முன்னர் பரிசோதித்தற்கான அறிக்கை.

20. பணிப்பாளரானவர், விடயத்துக்கேற்றுற்போலக் காளை அல்லது
கருத்தரிக்க உதவும் பசு உடனலமுள்ளதாயும், குறித்துரைக்கப்பட்ட
நோய் இல்லாததாயும், அத்துடன் குறிப்பாக அது புரூசலோசிஸ், விப்றி
யோசிஸ், றைகோமொனியாசில் அல்லது வேறு ஏதேனும் விதித்துரைக்
கப்பட்ட நோயினால் தொற்றுக்குள்ளாக்கப்படவில்லை எனவும் அதிகாரம்
பெற்ற அலுவலரால் வழங்கப்பட்ட பரிசோதனை அறிக்கை மீது அவர்
திருப்திப்படுவாரானால், அத்தகைய உரிமத்தை வழங்குதல் வேண்டும்.

## பாகம் III

### விலங்கு மற்றும் விலங்கு உற்பத்திப் பொருட்கள், விலங்கு வைத்திய அவுடதங்கள், விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதியும் ஏற்றுமதியும்

அனுமதிப் பத்திரம் ஒன்று இல்லாமல் இறக்குமதி செய்தலைத் தடை செய்தல்.

21. (1) ஆள் எவரும், பணிப்பாளரின் விதப்புரையின் மீது இறக்கு
மதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரினால் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்
பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் தவிர ஏதேனும்
விலங்கை, விலங்கு உற்பத்திப் பொருளை, விலங்கு வைத்திய அவுடத்தை,
விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருளை, விலங்கு ஆண்கருவை
அல்லது கருவை இறக்குமதி செய்தல் ஆகாது.

(2) அத்தகைய இறக்குமதி விதந்துரைக்கப்பட்டுள்ளவிடத்து பணிப்
பாளரானவர் புகுமுகத் துறைமுகத்தை விதித்துரைத்தல் வேண்டும்.

விலங்கு உற்பத்தி பொருள் ஒன்றை இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்.

22. (1) பணிப்பாளரானவர், விலங்குகளின் நோயை விளைவிக்கக்கூடிய
ஏதேனும் தொற்றுப் பதார்த்தம் அத்தகைய விலங்கு உற்பத்திப் பொரு
ளில் இல்லை என்பதைக் கூறுகின்ற விலங்கு உற்பத்திப் பொருள் பெறப்
படுகின்ற நாட்டில் உள்ள பிரதான விலங்கு வைத்திய அலுவலரால் அல்
லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவரினால் வழங்கப்பட்
சான்றிதழை இறக்குமதியாளர் காண்பித்தால் அன்றி, விலங்கு உற்பத்திப்
பொருள் எதனையும் இறக்குமதிசெய்வதற்கான அனுமதிப் பத்திரத்தை
கொடுப்பதற்கான விதப்புரையைச் செய்தல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான சான்றிதழானது, இதற்கான இரண்டாம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(3) புகுமுகத் துறைமுகத்தில் விலங்கு உற்பத்திப் பொருள் வரும் தேதிபற்றிய அறிவித்தலானது, இறக்குமதியாளரினல் பணிப்பாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு அத்தகைய உற்பத்திப் பொருள் வருவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக கொடுக்கப்படுதல் வேண்டும்.

23. (1) அமைச்சரானவர், துறைமுகம் கப்பற்றுறை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனை கலந்தாலோசனையின் பின்னர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் துறைமுகத்தை அல்லது இடத்தை விலங்கு நோய் பரவியுள்ள ஒரு துறைமுகமாக அல்லது இடமாக வெளிப்படுத்தலாம்.

(2) எவரேனும் ஆளுக்கு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நோய் பரவியுள்ள ஒரு துறைமுகமாக அல்லது இடமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து ஏதேனும் விலங்கினை அல்லது விலங்கு உற்பத்திப் பொருளை இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரம் எதுவும் வழங்கப்படுதலாகாது.

ஏதேனும் துறைமுகத்தை அல்லது வேறு இடத்தை நோய் பரவியுள்ள இடமாக வெளிப்படுத்துவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.

24. இருபத்துமூன்றும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விலங்கு நோய் தொற்றியுள்ளதென வெளிப்படுத்தப்பட்டுள்ளதும் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ளதுமான ஏதேனும் துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து விலங்குகளை ஏற்றிவருகின்ற அத்தகைய கலனில் நோய் தொற்றியுள்ள ஏதேனும் விலங்கு அல்லது நோயினல் பீடிக்கப்பட்டுள்ள ஏதேனும் விலங்கு இருக்கின்றதென அதிகாரசபை கருதினல், அத்தகைய கலனிற்கு உட்புகுத்துவதற்கான அனுமதியை மறுத்தல் தோதான அதிகாரசபைக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும்.

நோய் தொற்றியுள்ள அல்லது நோயினல் பீடிக்கப்பட்டுள்ள ஏதேனும் விலங்கினை ஏற்றி வருகின்ற கலங்களுக்கு உட்புகுவதற்கான அனுமதி மறுப்பதற்கு துறைமுக அதிகாரசபைக்குள்ள தத்துவம்.

25. (1) இலங்கையினுள் விலங்கொன்றினை இறக்குமதி செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய விலங்கினை ஏற்றிவருகின்ற கலமானது வருந்தேதியும் நேரமும்பற்றி பணிப்பாளருக்கு அல்லது அதன்சார்பில் பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு முன்னறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

இறக்குமதியாளரால் செய்யப்படும் வருகை பற்றிய அறிவித்தல்.

(2) பணிப்பாளர், அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கெனச் செய்யும் விதப்புரையில் அத்தகைய அறிவித்தலானது எக்காலப்பகுதிக்கு முன் கொடுக்கப்பட வேண்டுமோ அக்காலப்பகுதியினைக் குறித்துரைத்தல் வேண்டும்.

உடனலச் சான்றிதழ்.

26. (1) பின்வரும் நிகழ்வுகளைக் காட்டுகின்றதான, விலங்கினது தோற்றுவாய் நாட்டினது பிரதான விலங்கு வைத்தியரிடமிருந்து அல் லது அதிகாரமளிக்கப்பெற்ற விலங்கு வைத்தியரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழை இறக்குமதியாளர் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தாலன்றி, இலங்கையினுள் விலங்கொன்றினை இறக்குமதி செய்வதற்காகப் பணிப் பாளரினால் அனுமதிப் பத்திரமெதுவும் விதந்துரைக்கப்படலாகாது—

(அ) விலங்கினது தோற்றுவாய் நாடு;

(ஆ) விலங்கானது நோயற்றதாக இருந்துள்ளதென்பதும் அது ஏற்று மதி செய்யப்படுவதற்கு முன்னர் மூன்றுமாத காலப்பகுதிக்கு நோயுற்ற விலங்குகளுடன் தொடர்பில்லாததாயிருந்ததென் பதும்;

(இ) விலங்கினது தோற்றுவாய் இடமானது, விலங்கினை ஏற்றிவரு கின்ற கலமானது துறைமுக வாயிலை விட்டுப் புறப்பட்ட தேதிக்கு முன்னர் மூன்று மாத காலப்பகுதிக்கு நோயற்றதாக இருந்துள்ளதென்பதும்; அத்துடன்

(ஈ) குறித்துரைக்கப்பட்ட நோய்களுக்கெதிராக விலங்கிற்குத் தடுப் பூசி ஏற்றப்பட்டுள்ளதென்பதும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான சான்றிதழானது இதற்கான மூன்றும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும்.

தரை இறங் குகை.

27. அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் அத்தகைய கலனுள் ஏறி அங் குள்ள விலங்கைப் பரிசோதித்து அத்தகைய விலங்கினை அல்லது சரக் கினை தரை இறக்குவதற்கு அதிகாரமளிக்கும்வரை, ஆள் எவரும் கல னொன்றினுள் ஏற அனுமதிக்கப்படக்கூடாது என்பதுடன் விலங்கு அல் லது சரக்கு எதுவும் தரையிறங்க அல்லது தரையிறக்கப்பட அனுமதிக் கப்படுதலுமாகாது.

தனிப்படுத் தல்.

28. (1) பணிப்பாளர், அவ்வாறு செய்வது விரும்பத்தக்கதென அவர் கருதினால், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடத்திலும் அத்தகைய ஆட்களினாலும் காலத்துக்குக்காலம் அவ்விலங்கானது கொண ரப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தினாலன்றி, இலங்கையினுள் இறக்கு மதிசெய்யப்படும் விலங்கு ஒவ்வொன்றும் குறைந்தது முப்பது நாள் காலப்பகுதிக்கு தனிப்படுத்தலுக்கமைந்ததாதல் வேண்டும்.

(2) பின்வருவன இறக்குமதியாளரின் கடமையாதல் வேண்டும்:—

(அ) தனிப்படுத்தி வைக்கப்படவேண்டுமென கட்டளையிடப்பெற்ற விலங்கு எதற்கும் போதுமான உணவும் நீரும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்; அத்துடன்

(ஆ) தனிப்படுத்தி வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு விலங்கிற்கும் சிகிச்சையளிப்பின் போதும் பாராமரிப்பின் போதும் உறப்பட்ட எல்லாச் செலவுகளையும் அத்துடன், தனிப்படுத்தியிருக்கும்போது இறக்கக்கூடிய ஏதேனும் விலங்கினது சடலத்தை கையுதிர்த்தலில் உறப்பட்ட எல்லாச் செலவுகளையும் பொறுத்துக் கொள்ளுதல்.

(3) இறக்குமதியாளர் ஒவ்வொருவரும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையிலான தனிப்படுத்தற் கட்டணமொன்றைச் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படல் வேண்டும்.

(4) தனிப்படுத்தலுக்கு அமைந்த விலங்கேதுவும் நோயுற்றதாகக் காணப்படுமிடத்து, அத்தகைய விலங்கை அழிப்பதற்கும் அதன் சடலத்தைக் கையுதிர்ப்பதற்கும் எனக் கட்டளையிடுதல் பணிப்பாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டுமென்பதுடன், 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய விலங்கினதும் அதன் சடலத்தினதும் அழிப்புக்கும் கையுதிர்ப்புக்கும் அவை தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

29. (1) அவ்வாறு செய்வது உசிதமானதெனப் பணிப்பாளர் கருதினால், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், ஏதேனும் தனிப்படுத்தகை நிலையத்திற்கு அருகிலுள்ள இடப்பரப்பொன்றினைப் பாதுகாப்பு வலயமொன்றாக வெளிப்படுத்துதல் பணிப்பாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். பாதுகாப்பு வலயம்.

(2) அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும் அத்தகைய வலயத்தின் எல்லைகளையும் அத்துடன் எத்தேதியிலிருந்தும் எக்காலப்பகுதிக்கும் அத்தகைய வலயம் தாபிக்கப்பட்டுள்ளதோ அத்தேதியையும் அக்காலப்பகுதியையும் குறித்துரைத்தலும் வேண்டும்.

(3) பாதுகாப்பு வலயமானது, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்கு, எல்லா வாகனப் போக்குவரத்துக்கும் அத்துடன் விலங்குப் போக்குவரத்துக்கும் மூடப்பட்டிருத்தல் வேண்டும். அதிகாரமளிக்கப்படாத ஆளெவரும், அத்தகைய காலப்பகுதியின்போது அத்தகைய பாதுகாப்பு வலயத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

30. இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் துறைமுகத்துக்கு ஏற்றியனுப்பப்பட்ட விலங்குகளைக் கொண்டுள்ள கலமொன்று இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்தினூடாகக் கடந்துசெல்லும்போதெல்லாம், அத்தகைய நிகழ்வை, அத்தகைய கலமானது இலங்கையிலுள்ள துறைமுகத்திற்கு வருவதற்கு குறைந்தது பத்து நாட்களுக்கு முன்னர், பணிப்பாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலரொருவருக்கு அறிவித்தல், இலங்கையிலுள்ள அத்தகைய கலத்தினது முகவரினது கடமையாதல் வேண்டும். இடைப்போக்கிலுள்ள விலங்குகள்.

விலங்கு வைத்திய அவுடதங்களையும் விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருட்களையும் இறக்குமதி செய்தல்.

31. (1) பணிப்பாளரானவர், எவரேனும் ஆள் அத்தகைய அவுடதத்தினது அல்லது உயிரியல் உற்பத்திப் பொருளினது பாதுகாப்பினையும் தரத்தினையும் சான்றுப்படுத்தி, உற்பத்திப் பொருளினது தோற்றுவாய் நாட்டினது பிரதான விலங்கு வைத்தியரிடமிருந்து அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற விலங்கு வைத்தியரொருவரிடமிருந்து பெற்ற சான்றிதழைப் பணிப்பாளருக்குக் காண்பித்தாலன்றி, ஏதேனும் விலங்கு வைத்திய அவுடதத்தை அல்லது விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருளை இறக்குமதி செய்வதற்காக அத்தகைய ஆளுக்கு அனுமதிப் பத்திரமொன்றை வழங்குவதற்கு விதந்துரைத்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான சான்றிதழானது, பொருளளவில் இதற்கான இரண்டாம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும்.

விலங்கு வைத்திய அவுடதக் கட்டுப்பாட்டு அதிகாரசபை.

32. (1) பின்வருவோரைக் கொண்டதான (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விலங்கு வைத்திய அவுடதக் கட்டுப்பாட்டு அதிகாரசபையொன்று இருத்தல் வேண்டும்:—

(அ) அப்போதைக்குப் பணிப்பாளர் பதவியை வகிக்கின்றவரான ஆள், இவரே அதிகாரசபையின் தவிசாளராதல் வேண்டும்;

(ஆ) திணைக்களத்தில் தொழிலிலமர்ந்திருக்கும், விலங்கு வைத்தியர்களிடையேயிருந்து அமைச்சரால் நியமிக்கப்பட்டவரான உறுப்பினர் ஒருவர், இவரே அதிகாரசபையின் பதிவாளராக இருத்தல் வேண்டும்.

(இ) பின்வரும் விடயங்களில் பரந்த அறிவும் அனுபவமும் உள்ளவர்களென அமைச்சருக்குத் தோன்றுகின்ற ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களான ஆறு உறுப்பினர்கள்:—

(i) அரச அத்துடன் தனியார்துறைகள் இரண்டிலுமான பிணிசார் பயில்வு;

(ii) நுண்ணுயிரியலும் நோய்த்தடுப்பியலும்;

(iii) ஒட்டுண்ணுயியல்;

(iv) வாகடவியல்;

(v) போஷாக்கு;

(vi) இனவிருத்தி உடலியலும் அகச்சுரப்பியலும்;

(ஈ) விலங்கு வைத்திய அவுடதங்களினதும் விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருட்களினதும் உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென அமைச்சரால் நியமிக்கப்பட்ட விலங்கு வைத்தியர் ஒருவராகவுள்ள உறுப்பினர் ஒருவர்;

(உ) அவர்களது சிறப்பார்ந்த ஆலோசனையையும் மதியுரையையும் பெற்றுக்கொள்ளும் நோக்கங்களுக்காக அவசியமான போதிலெல்லாம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள்;

(2) ஓராம் உட்பிரிவின் பந்தி (ஆ) என்பதன்கீழ் நியமிக்கப்படும் பதிவாளர் அல்லது பந்தி (இ) என்பதன்கீழ்ப் பெயர்குறித்து நியமிக்கப்படும் எவரேனும் உறுப்பினர் இறப்பின்மூலம், அல்லது பதவி துறத்தல்மூலம், அல்லது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் பதவியகற்றப்படுவதன்மூலம், முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலன்றி விடயத்துக்கேற்றவாறு அத்தகைய நியமனத் தேதியிலிருந்து அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்:

ஆயின், இறக்கின்றவரான, பதவிதுறக்கின்றவரான அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்குகின்றவரான உறுப்பினர் ஒருவரின் இடத்திற்கு நியமிக்கப்படும் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர், அவர் முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலன்றி எந்த உறுப்பினருக்குப் பின்னமைந்தவரானரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதுள்ள பதவிக்காலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் பணிப்பாளரைத் தவிர்ந்த உறுப்பினர் எவரையும் அதற்கான காரணமெதனையும் காட்டாமல் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) காலக்கழிவு காரணமாகப் பதவியை வறிதாக்குகின்றவரான பணிப்பாளர் தவிர்ந்த உறுப்பினர் எவரும், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், அப்பயன்பட அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதம்மூலம் எந்த நேரத்திலும் அவரது பதவியைத் துறக்கலாமென்பதுடன், அத்தகைய பதவி துறத்தலானது அமைச்சரால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுவதாதலும் வேண்டும்.

(6) எவரேனும் உறுப்பினர், உடனலமின்மையால், இலங்கையில் இல்லாமையால் அல்லது வேறேதேனும் காரணத்தால் அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருந்தால் அவரது இடத்தில் பதிற் கடமையாற்ற என வேறோர் ஆளை அமைச்சர் நியமிக்கலாம்.

(7) அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கின்ற அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் உறுப்பினர்களின் ஊதியத்தையும் அத்துடன் அத்தகைய கொடுப்பனவு முறையையும் தீர்மானிக்கலாம்.

(8) அதிகாரசபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பன பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) விலங்குவைத்திய அவுடதங்களினதும் அத்துடன் விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருட்களினதும் உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி விற்பனை அத்துடன் பயன்பாடு என்பவற்றின் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்;

(ஆ) விலங்கின்மீது விலங்கு வைத்திய அவுடதகங்களினதும் அத்து
டன் விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருட்களினதும்
திறமையானதும் பாதுகாப்பானதுமான பயன்பாட்டை நிச்ச
யப்படுத்துதல் ;

(இ) விலங்கு வைத்திய அவுடதங்களினதும், அத்துடன் விலங்கு வைத்
திய உயிரியல் உற்பத்திப் பொருட்களினதும் உற்பத்திக்காகவும்
இறக்குமதிக்காகவும் உரிமங்கள் வழங்கப்படுதல் வேண்டுமா
என்பதைத் தீர்மானித்தல்;

(ஈ) அமைச்சருக்கு, மதியுரைக்கென அவரால் அதிகாரசபைக்கு ஆற்
றுப்படுத்தப்படக்கூடியவாறான ஏதேனும் கருமம்மீது அல்லது
அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவது அவசியமென
அது கருதுகின்றதான வேறு ஏதேனும் கருமம்மீது மதியுரை
வழங்குதல் ;

(உ) விலங்கு வைத்திய அவுடதங்களையும் அத்துடன் விலங்கு வைத்திய
உயிரியல் உற்பத்திப் பொருட்களையும் சோதிப்பதற்கு அல்லது
மேம்படுத்துவதற்கு அவசியமானதென அதிகாரசபை கருது
கின்ற இராய்ச்சியை ஊக்குவித்தல் ;

(ஊ) விலங்கு வைத்திய அவுடதங்களினதும் அத்துடன் விலங்கு வைத்
திய உயிரியல் உற்பத்திப் பொருட்களினதும் பாதுகாப்பானதும்
திறமையானதுமான பயன்பாடு தொடர்பில் தகவலைப் பரப்
புதல்; அத்துடன்

(எ) அதிகாரசபையின் அபிப்பிராயத்தில் அவசியமாகும் போதெல்
லாம் ஏற்கனவே உரிமம் வழங்கப்பட்டனவான அல்லது உரிம
மொன்று வழங்கப்படுவதற்குக் காத்திருப்பதான விலங்கு வைத்
திய அவுடதங்கள் அத்துடன் விலங்கு வைத்திய உயிரியல் உற்
பத்திப் பொருட்கள் என்பனமீது சோதனைகள் செய்தல் அல்லது
செய்வித்தல்.

ஆண்கரு அல்லது மூலக்கருவின் இறக்குமதி.

33. (1) ஆண்கரு அல்லது மூலக்கரு தருவிக்கப்படும் நாட்டிலுள்ள
பிரதான விலங்கு வைத்தியரிடமிருந்து அல்லது அவரால் அதிகாரமளிக்
கப்பட்ட ஓர் விலங்கு வைத்தியரிடமிருந்து ஆண்கரு அல்லது மூலக்கரு
சேகரிக்கப்பட்ட விலங்கு, ஏதேனும் நோயினால் அல்லது தொற்றுகளினால்
பாதிக்கப்பட்டிருக்கவில்லை எனவும், ஆண்கரு அல்லது மூலக்கரு சேகரிக்
கப்பட்ட தேதிக்கு முந்திய மூன்று மாத காலப்பகுதிக்குள் அவ்விலங்கு
தொற்றுள்ள அல்லது நோயுற்ற ஏதேனும் விலங்குடன் தொடர்புபட்டி
ருக்கவில்லை எனவும், உறுதிப்படுத்தும் அத்தாட்சிப் பத்திரமொன்றை
அத்தகைய ஆள் பணிப்பாளரிடம் காண்பித்தாலன்றி, விலங்கு ஆண்
கருவை அல்லது மூலக்கருவை எவரேனும் ஆள் இறக்குமதி செய்வதற்
கான ஓர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்குப் பணிப்பாளர் விதந்
துரைத்தலாகாது.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள சான்றிதழ் இச்சட்
டத்தின் மூன்றும் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள படிவத்தில்
இருத்தல் வேண்டும்.

(3) விலங்கு ஆண்கருவை அல்லது மூலக்கருவை இறக்குமதி செய்பவர் ஆண்கரு அல்லது மூலக்கரு வந்துசேரும் தேதியையும் துறைமுகம் அல்லது இடத்தையும் அது வந்துசேரும் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னராவது எழுத்துமூலம் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் ஆண்கருவை அல்லது மூலக்கருவைப் பயன்படுத்துவதானது தொற்றுதலை அல்லது நோயை உண்டாக்குமென நம்புவதற்குப் போதிய ஆதாரங்கள் இருந்தால் அத்தகைய ஆண்கருவை அல்லது மூலக்கருவை மீளப்பெற்று அதனை அழித்துவிடச் செய்வது பணிப்பாளருக்குச் சட்டபூர்வமானதாயிருத்தல் வேண்டுமென்பதுடன், ஒன்பதாம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஆண்கருவை அல்லது மூலக்கருவை அழித்துவிடுவதற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கரு அல்லது மூலக்கரு பயன்படுத்தப்படவிருக்கும் விலங்குக் கூட்டம் ஒரு விலங்கு வைத்திய அலுவலரின் மேற்பார்வையின்கீழும் கட்டுப்பாட்டின்கீழும் இருக்குமாறு பணிப்பாளர் செய்தல் வேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கரு அல்லது மூலக்கரு பயன்படுத்தப்பட்ட விலங்குக் கூட்டத்தின் ஏதேனும் ஒரு விலங்கில் ஏதேனும் நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டால் அத்தகைய பயன்படுத்தல் இடம்பெற்ற ஒரு மாதத்திற்குள் அதுபற்றிப் பணிப்பாளருக்கு அறிக்கையிடல் அத்தகைய விலங்கு வைத்தியரின் கடமையாதல் வேண்டும்.

(6) இறக்குமதி செய்யப்பட்ட விலங்கு ஆண்கரு அல்லது மூலக்கரு பயன்படுத்தப்பட்டதன் விளைவாக விலங்குக்கூட்டம் ஒன்றில் குறைப்பிரசவம் அல்லது இறந்து பிறத்தல் நிகழ்ந்தால், அத்தகைய விலங்குக் கூட்டம் எந்த விலங்கு வைத்திய அலுவலரின் மேற்பார்வையின்கீழும் கட்டுப்பாட்டின்கீழும் உள்ளதோ அந்த வைத்திய அலுவலர் அத்தகைய நிகழ்வுபற்றி உடனடியாகப் பணிப்பாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலருக்கு அறிவித்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

34. (1) பணிப்பாளரின் விதப்புரையின்மேல், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி, ஆளெவரும் ஏதேனும் விலங்கை, விலங்கு உற்பத்திப் பொருளை, விலங்கு வைத்திய அவுடத்தை, விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருட்களை, ஆண்கருவை அல்லது மூலக்கருவை ஏற்றுமதி செய்தலாகாது. ஏற்றுமதி.

(2) ஏற்றுமதியாளர் ஏற்றுமதி செய்வதற்கு முன்பு, அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரிடமிருந்து பெற்ற சான்றிதழொன்றைப் பணிப்பாளருக்குக் காண்பித்தாலன்றி ஏதேனும் விலங்கை, விலங்கு உற்பத்திப் பொருளை, விலங்கு வைத்திய அவுடதத்தை, விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருளை, ஆண் கருவை அல்லது மூலக்கருவை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்காகப் பணிப்பாளரால் விதப்புரை எதுவும் செய்யப்படுதலாகாது.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக "அதிகாரம் பெற்ற அலுவலர்" என்பது பணிப்பாளரால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் விலங்கு வைத்தியர் என்று பொருள்படும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான சான்றிதழ் விடயத்திற்கேற்றுப்போன்று பொருளளவில் இதற்கான இரண்டாம் அல்லது மூன்றும் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வோர் ஏற்றுமதியாளரும் ஏதேனும் அத்தகைய ஏற்றுமதி செய்தல் பற்றிப் பணிப்பாளருக்கு ஆகக் குறைந்தது ஒரு வார அறிவித்தலாவது கொடுத்தல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

தவறுகளும் தண்டங்களும்

35. (1) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதனத்துச் செய்யப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளை அல்லது அத்தகைய எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழ் சுமத்தப்பட்ட எவையேனும் தேவைப்பாட்டை மீறும் அல்லது அவற்றிற்கு இணங்கியொழுகத் தவறும் அல்லது இச்சட்டத்தின் கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை எவரேனும் அலுவலர் பிரயோகிப்பதை எதிர்க்கும் அல்லது தடை செய்யும் ஒவ்வொராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் ஒருவர் முன்பாக சுருக்கமுறை விளக்கம் ஒன்றின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அத்தகைய ஒவ்வோராளும் ஆறு மாத காலத்திற்கு மேற்படாத இருவகையில் ஒருவகை மறியல் தண்டனைக்கு அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப் பணத்திற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) தவறொன்று ஆட்கள் குழு ஒன்றால் புரியப்பட்டால்,

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இருக்குமிடத்து, கூட்டிணைக்கப்பட்ட அக்குழுவின் பணிப்பாளர், முகாமையாளர், செயலாளர், அல்லது அலுவலர் ஆகிய ஒவ்வொருவரும்; அல்லது

(ஆ) அக்குழு ஒரு குழுமமாயிருக்குமிடத்து அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

அத்தகைய தவறு அவருடைய சம்மதம் அல்லது ஒருப்பாடு இல்லாமல் புரியப்பட்டதெனவும் அத்துடன் அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கான அத்தகைய விழிப்புக்கவனம் எல்லாவற்றையும் தான் பிரயோகித்ததாகவும் அவர் எண்பித்தாலன்றி அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

நன்னோக்கத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

36. இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழ் எவரேனும் ஆளினால் நன்னோக்கத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எவையேனும் நடவடிக்கைக்காக அவருக்கெதிராகத் தா ர்ச்சி குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படக்கூடாது.

ஒழுங்குவிதிகள்

37. (1) விதிக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது எக்கருமங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டதோ அத்தகைய எல்லாக் கருமங்கள் தொடர்பாகவும் அத்துடன் குறிப்பாகப் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பில் அல்லது அவற்றுள் எவையேனும் ஒன்று தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம் செய்யப்படக்கூடிய விதமும் முறையும்; அத்துடன்

(ஆ) உரிமம் ஒன்றை வழங்குவதற்கும் புதுப்பித்தலுக்கும் வழங்கப்படவேண்டிய கட்டணம்.

(2) அமைச்சரால் ஆக்கபடும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் இயலக்கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அவ்வாறு அங்கிகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அத்தகைய மறுப்புத் தேதியிலிருந்து, அதன்பிற் முன்னர் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாந்தன்மைக்குப் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(4) எவையேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டிய தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

(5) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டிராத விலங்கு நோய் எதனையும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட நோய் ஒன்றாக வெளிப்படுத்தலாம் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அதற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

பொருள் கோடல்

38. இச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி —

"விலங்கு" என்பது கால்நடை, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி, மீன், குதிரை, கோவேறு கழுதை, கழுதை நாய், பூனை, பறவை, தேனீ என்று பொருளாகும் என்பதுடன், பழக்கப்பட்ட அல்லது சிறைப்பட்ட நிலையில் அல்லது கட்டுப்பாட்டினில் அல்லது வேறு வகையில் வைத்திருக்கபடும் பழக்கப்படாத ஏதேனும் பிறவிலங்கையும் உள்ளடக்கும்;

"விலங்கு உற்பத்திப்பொருள்" என்பது இறைச்சி, பால் மீன், முட்டை, இரத்தம், தோல், சருமம், மயிர், ரோமம், இறகுகள், கழிவு இறைச்சி, கொம்பு, குளம்பு அல்லது ஒரு விலங்கிலிருந்து பெறப்பட்ட பதனிடப்படாத, சமைத்த அல்லது பதனிடப்பட்ட ஏதேனும் பிற உற்பத்திப் பொருள் என்பவற்றை உள்ளடக்கும்;

"தோதான அதிகாரி" என்பது —

(அ) ஒரு கடல் துறைமுகத்தின் விடயத்தில் 1979 ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க, துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட துறைமுக அதிகார சபை எனப் பொருள்படும்; அத்துடன்

(ஆ) ஒரு வானூர்தித்துறையின் விடயத்தில் 1932 ஆம் ஆண்டின் இரண்டாம் இலக்க, வான்கலமோட்டும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஒரு முகவர் அத்துடன் அத்தகைய முகவர் நியமிக்கப்படாத விடத்து சிவில் வான்செலவுப் பணிப்பாளர் நாயகம் எனப் படும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர் எனப் பொருள்படும் ;

"சடலம்" என்பது ஏதேனும் விலங்கின் சடலம் எனப் பொருள்படும் என்பதுடன் விலங்கொன்றினது சடலத்தின் பாகத்தையும், இறைச்சியையும், எலும்பையும், தோலையும், சருமத்தையும், குளம்பையும், கொம்பையும், கழிவு இறைச்சியையும் அல்லது வேறு பாகத்தையும் தனிவேருகவோ அல்லது வேறுவிதமாகவோ அல்லது அதன் ஏதேனும் பாகத்தையும் உள்ளடக்கும் ;

"தொடுநோய்" என்பது தொடுதல் மூலம் பரப்பப்படும் நோய் எனப் பொருள்படும் ;

"பணிப்பாளர்" என்பது விலங்கு உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் எனப் பொருள்படும் ;

"நோய்" என்பது முதலாம் அட்டவணையில் நிரற்படுத்தப்பட்டுள்ள விலங்குகளுக்கு அல்லது பறவைகளுக்கு ஏற்படும் தொற்று நோய் அல்லது தொடுநோய் என்று பொருள்படும்.

"கழிவுப் பொருள்" என்பது, விலங்கிலிருந்து அல்லது அதன் சடலத்திலிருந்து வெளியேற்றப்படும் சாணம், சிறுநீர் அல்லது ஏதேனும் வேறு பொருள் எனப்பொருள்படும் ;

"உணவு" என்பது விலங்குகளுக்குத் தீனியூட்டுவதற்குப் பயன்படுத்தப்பட உத்தேசிக்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் அரிசித் தவிடு, கோதுமைத்தவிடு, தானியங்கள், உமி அல்லது கடல் மூலத்திலிருந்து எடுக்கப்படும் தாவர எண்ணெய், எண்ணெய் பிண்ணாக்கு அல்லது தாவரத்திலிருந்து அல்லது விலங்கிலிருந்து கிடைக்கும் ஏதேனும் பதனிடப்பட்ட அல்லது பதனிடப்படாத வேறு பண்டம் என்பவற்றை உள்ளடக்கும் ;

"மீன்" என்பது, கடலிலிருந்து கிடைக்கும் எல்லா வகை மீனையும், நண்டையும், இருலையும், சிங்கி இருலையும், ஆமையையும் அத்துடன் நன்னீர் மீனையும், சமைக்கப்பட்டதாயினும்சரி, தகரத்தில் அடைக்கப்பட்டதாயினும்சரி, உலர்த்தப்பட்டதாயினும்சரி, உப்பிடப்பட்டதாயினும்சரி அல்லது புகையூட்டப்பட்டதாயினும் சரி உள்ளடக்கும்;

"தீனி" என்பது, பச்சையாக இருக்கின்ற அல்லது பேணி வைக்கப்பட்டிருக்கின்ற தாவரத்திலிருந்து கிடைக்கின்றதான புல், வைக்கோல், ஒட்டு, இரைபேணி அல்லது ஏதேனும் வேறுபொருளை உள்ளடக்கும்;

"தொற்று" என்பது, கிருமி பாய்ச்சல் மூலம் அல்லது உயிரிலாக் காவிகளுடன் தொற்றும் சுரப்புக்களும் கழிவு வெளியேற்றுதல்களும் கலத்தல் மூலம் பரப்பப்படுவது என்று பொருள்படும்;

"குப்பைக்கூளம்" என்பது விலங்குகளுக்கு படுக்கையாக அல்லது வேறுவிதமாகப் பயன்படுத்தப்படும் ஒட்டு, கோது, மரச்சீவல்கள் அத்துடன் ஏதேனும் வேறு பொருள் என்பவற்றை உள்ளடக்கும்;

"இறைச்சி" என்பது பச்சையாக இருக்கின்ற, சமைக்கப்பட்ட, பதனிடப்பட்ட, புகையூட்டப்பட்ட, பொரிக்கப்பட்ட, உப்பிடப்பட்ட அல்லது தகரத்தில் அடைக்கப்பட்ட, கழிவு இறைச்சி உள்ளடங்கலாக விலங்கொன்றின் சடலத்தின் உண்ணக்கூடிய ஏதேனும் பகுதி எனப் பொருள்படும்;

"சொந்தக்காரர்" என்பது, விலங்கொன்று தொடர்பில் ஏதேனும் விலங்கை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுகின்ற கூட்டுச் சொந்தக்காரர்களை அல்லது ஆளொருவரை அல்லது சொந்தக்காரர் ஒருவர் சார்பில் அதனை பேணிக்காக்கின்ற எவரேனும் ஆளை உள்ளடக்கும்;

"தனிப்படுத்தல்" என்பது ஏதேனும் விலங்கை, அல்லது பொருளைப் பிரித்துத் தனியே கட்டாயத் தடுப்பில் வைத்திருத்தல் எனப் பொருள்படும்;

"தனிப்படுத்தல் நிலையம்" என்பது தொற்று நோய்த்தடுப்புச் செய்யப்படும் ஏதேனும் கட்டிடம் அல்லது இடம் எனப் பொருள்படும் என்பதுடன், அது பரிசோதனை நிலையமொன்றினையும் உள்ளடக்கும்;

"விலங்குவைத்திய உயிரியல் உற்பத்திப் பொருள்" என்பது,

(i) நோயைக் கண்டுபிடித்தலில், அதற்கு வைத்தியம் செய்தலில் அல்லது அது வராமல் தடுப்பதில் பயன்படுத்த உத்தேசிக்கப்படும் நோய்த்தடைப்பால் வகைகள், நீர்ப்பாயங்கள், உயிருள்ள அல்லது இறந்த நுண்ணுயிர்கள் அத்துடன் அவற்றில் இருந்து எடுக்கப்பட்ட சத்துக்கள் அல்லது அவற்றிலிருந்து கிடைக்கும் உப உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றை உள்ளடக்கும்;

"விலங்கு வைத்திய அவுடதம்" என்பது —

(அ) ஏதேனும் விலங்கில் அதன் நோயை அல்லது அசாதாரண உடல் நிலைமையைக் கண்டுபிடிப்பதில், அவற்றிற்குச் சிகிச்சையளிப்பதில், அவற்றைத் தணிப்பதில் அல்லது தடுப்பதில்; அத்துடன்

(ஆ) எதேனும் விலங்கில் சேதனப் பணிகளை மீளவமைப்பதில் செம்மைப்படுத்துவதில் அல்லது திரிபுபடுத்துவதில்,

பயன்படுத்துவதற்கென உற்பத்தி செய்யப்படும், விற்பனை செய்யப்படும், விற்பனைக்காக முனையப்படும், அல்லது எடுத்துச் செல்லப்படும் ஏதேனும் பதார்த்தத்தை அல்லது பதார்த்தங்களின் கலவையை;

(ii) பயன்படுத்துவதற்குத் தயாராக உள்ளதும் அத்துடன் ஆக்கவுரிமை பெற்ற மற்றும் உரிமை சார்ந்த தயாரிப்புகளைச் சிறப்பான பெயரின்கீழ் அல்லது குறிப்பான வடிவத்தில், சந்தையில் முன்வைக்கப்படும் தனியானதொரு மருந்தை அல்லது மருந்துகளின் சேர்க்கையை,

உள்ளடக்கும் ;

"விலங்கு வைத்தியர்" என்பது, அரசினால் ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ள விலங்கு வைத்தியர் ஒருவர் எனப் பொருள்படும் ;

"கலம்" என்பது, விலங்குகளை, விலங்கின் உற்பத்திப் பொருட்களை அல்லது பறவைகளை நீர் மார்க்கமாக அல்லது ஆகாய மார்க்கமாக எடுத்துச் செல்லும் பயணத்தில் பயன்படுத்தக்கூடிய எவ்வாறாகவும் உந்தப்படுகின்ற போக்குவரத்து வழிமுறை எனப் பொருள்படும்.

நீக்கலும் பேணல் களும்.

39. (1) நானூற்று எழுபதாம் அத்தியாயமான தொடு நோய்கள் (விலங்குகள்) கட்டளைச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) தொடு நோய்கள் விலங்குகள் கட்டளைச் சட்டம் நீக்கப்படுவது எவ்வாறிருப்பினும், அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டனவும் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு நேர் முன்னர் வலுவிலிருந்தனவுமான ஒழுங்குவிதிகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இராதவரைக்கும் தவிரவும், அவற்றுடன் ஒவ்வாதனவாக இராத அளவு வரைக்கும், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் எனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் மாற்றப்படும், திருத்தப்படும் அல்லது நீக்கப்படும் வரைக்கும் தொடர்ந்து வலுவில் இருத்தலும் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

40. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

முதலாம் அட்டவணை (பிரிவு 4)

தொடு நோய்கள்

I கால்நடை, எருமை

அந்திரக்ஸ், ஹெமோறேஜிக், ஸிமோறேஜிக் செப்டிசீமியா, பிளாக்குவாட்டர், புரூ செல்லோஸிஸ், காசநோய், ஜோனீஸ்நோய், கொன்டேஜஸ்ஸியஸ் போவைன் புளூரோநியுமோனியா, மெலிடிடோஸிஸ், போவைன்பார்ஸி, லிப்பிறி

ஓஸிஸ், போவைன் ஜெனிற்றல் கம்பிலோபக்டீறிஓஸிஸ், வாய் மற்றும் குழம்பு நோய், கோமாரி நோய், போவைன்வைரல் வயிற்றோட்டம், மலிக்னன்ற் கற்ரூறல் காய்ச்சல், வெசிக்கியுலர் ஸ்டோமடைட்டிஸ், லம்பி ஸ்கின் நோய், இன்பெக்ஷஷ் போவைன் றைனோ ட்ரக்கிஜட்டிஸ் (ஐ பி ஆர்/ஐ பி எம்), புறெலிபெறேற்றிவ் ஸ்டோமடைட்டஸ், போவைன் வைரல் லியூகோஸிஸ்.

ட்ரிப்பானேசோமியாஸிஸ், ட்ரைக்கோமொனியாஸிஸ், பபிசியோஸிஸ், அனப்பிளாஸ்மோசிஸ், தெய்லீறியாசிஸ்,

வாபின் ஈ (ஹைப்போடெமா போவைஸ் அத்துடன் பிவிலியேற்றம்) டேமற்றோமைக்கோசிஸ்.

II செம்மறியாடு, வெள்ளாடு

அத்திறுக்ஸ், பாய்சறெல்லோஸிஸ், புறா ஸெல்லோஸிஸ், காசநோய், கொன்டேஜஸ் கப்பிறின் புளூரோநியூமோனியா, வாய் மற்றும் குழம்பு நோய், கோமாரி நோய், வெசிகியூலர் ஸ்டோமட்டைட்டிஸ், கொன்டேஜஸ் புஸ்டியூலர் டேமட்டைட்டிஸ், புளூடங், மீடி (விஸ்னா), அடினோமட்டோஸிஸ், ஸ்கிறேப்பி, பெஸ்டெடி பெற்றிற் றாமினன்ஸ் (பிபிஆர்), செம்மறியாட்டு அம்மை, வெள்ளாட்டு அம்மை, ட்ரிப்பானேசோமியாசிஸ், டேமற்றோமைக்கோஸிஸ்.

III பன்றிகள்

அத்திறுக்ஸ், பாஸ்சறெல்லோஸிஸ், புறா செல்லோசிஸ், காசநோய், பன்றிக்குரிய எரிசெபலஸ், வாய் மற்றும் குழம்பு நோய், வெசிக்கியூலர், ஸ்டோமடைட்டிஸ், வெசிக்கியூலர், பெக்ஸ்த்தீமா, பன்றிக்காய்ச்சல், ஆப்பிரிக்கப் பன்றிக்காய்ச்சல், ஓஜெஸ்கீஸ்நோய், எட்ரோப்பிறைனேற்றிஸ், பன்றிக்குரிய வெசிக்கியூலர் நோய், டெஸ்சன்நோய், பாப்பக்கூடிய காஸ்ட்ரோ எஸ்டறைற்றிஸ், அத்துடன் ஜப்பானிய பி. என். செபலேற்றின்.

ட்ரிப்பானேசோமியாஸிஸ்,

டேமற்றோமைக்கோஸிஸ்.

IV. நாய்களும் பூனைகளும்

நாய்களுக்குரிய பார்வோனவரஸ் தொற்றுநோய், பூனைகளுக்குரிய என்ரைடிஸ், விலங்கு விசர்நோய், டெர்மடோமைகோசிஸ்.

V. பண்ணைப்பறவை

புல்லோரம் நோய், கோழி நெருப்புக்காய்ச்சல், கோழி வாந்திபேதி, ஏவியன் காசநோய்.

கோழி கொள்ளைநோய், நியூகாசில் நோய் (ரெனிகட்), மாரெக்ஸ்நோய், ஏவியன் லூகோசிஸ், கம்போரா நோய், ஏவியன் என்கோடலோமிலைடிஸ் தொற்றுநோய், லரின்கோடிரைடல்கடிஸ் தொற்றுநோய், ஏவியன் புரோன்கைடிஸ் தொற்றுநோய், வாத்து என்ரடைஸி நோய்க்கிருமி (வாத்துக் கொள்ளை நோய்), கோழியம்மை, மைகோப்லாமொஸிஸ்.

VI. குதிரைகள்

அந்தரொக்ஸ், கிளான்டெர்ஸ், ஆபிரிக்கக் குதிரைப்பிணி, குதிரைத் தொற்று இஞ்சோபலோமியலைடிஸ், வெஸிகியூலர் ஸ்டோமாடைடிஸ், டிரைபனோசொமியாசிஸ், எபிசூட்டிக் லிம்பங்கைடிஸ், குதிரைத்தொற்று.

VII மீன்

சதையத் தொற்று நெக்ரோசிஸ் நோய்.

VIII தேனீ

பவுஸ் புரோட், வரோசிஸ்.

**இரண்டாம் அட்டவணை** [பிரிவுகள் 22(2), 31(2), 34(3)]

சர்வதேச வியாபாரத்திற்கென முன்னப்படும் விலங்கு உற்பத்திப் பொருள்கள், விலங்கு வைத்திய அவுடதங்கள், அல்லது விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருள்கள் என்பவற்றை இறக்குமதி/ஏற்றுமதி செய்வதற்கான சான்றிதழ்.

1. இறக்குமதி/ஏற்றுமதி செய்யும் நாடு :————.

2. ஏற்றுமதி செய்பவரின் பெயர் :————.

3. ஏற்றுமதி செய்பவரின் முகவரி :————.

4. விலங்கு உற்பத்திப் பொருள்/விலங்கு வைத்திய அவுடதம்/விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருள் என்பவற்றின் தோற்றுவாய் இடம் :————.

(I) விலங்கு உற்பத்திப் பொருள்/விலங்கு வைத்திய அவுடதம்/விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருள் என்பவற்றை இனங்காணல்.

1. விலங்கு உற்பத்திப் பொருளின்/விலங்கு வைத்திய அவுடதத்தின்/விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருளின் வகை :————.

2. பொதியின் வகை :————.

3. பொதிகளின் எண்ணிக்கை :————.

4. தேறிய நிறை :—

(II) விலங்கு உற்பத்திப் பொருளின் உற்பத்தித்தானம்.

1. அங்கீகரிக்கப்பட்ட பொதுவிலங்கறு மனையின்/மனைகளின் முகவரி/முகவரிகள் :————.

2. அங்கீகரிக்கப்பட்டனவான தயாரிகின்ற/பதனிடுகின்ற தாபனத்தின்/தாபனங்களின் முகவரி/முகவரிகள் :————.

(III) விலங்கு உற்பத்திப் பொருள்/விலங்கு வைத்திய அவுடதம்/விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருள்கள் என்பவற்றின் சேரிடம்.

1. சென்றடையும் நாடு :—— —.

2. அனுப்பும் பொருள் பெறுநரின் பெயரும் முகவரியும் :————.

3. போக்குவரத்தின் வழியும் தன்மையும் :————.

(IV) உணவுக்கு உகந்ததென அத்தாட்சிப்படுத்தல்

கீழொப்பமிட்ட அதிகாரம் பெற்ற விலங்கு வைத்தியர் பின்வருமாறு அத்தாட்சிப்படுத்துகின்றார் :—

1. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விலங்கு உற்பத்திப் பொருள் அங்கீகரிக்கப்பட்ட பொது விலங்கறு மனைகளில் அறுக்கப்பட்ட விலங்குகளிலிருந்து வந்ததென முத்திரையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

2. விலங்கு உற்பத்திப் பொருட்கள் மனித நுகர்வுக்குத் தகுந்ததெனக் கருதப்படுகின்றது.

3. விலங்கு உற்பத்திப் பொருள் அங்கீகரிக்கப்பட்ட/தயாராகின்ற/பதனிடுகின்ற தாபனத்தில் தயாரிக்கப்பட்டது/பதனிடப்பட்டது.

4. விலங்கு உற்பத்திப் பொருள் தொடுநோய் இல்லாதவோர் நாட்டிலிருந்து வந்தது.

5. விலங்கு வைத்திய அவுடதம்/விலங்கு வைத்திய உயிரியல் உற்பத்திப் பொருள் விலங்குகள் மீது பன்படுத்தப்படுவதற்குப் பாதுகாப்பானது.

6. வேறு ஏதேனும் இயைபான விபரங்கள்.

---

அதிகாரம் பெற்ற விலங்கு வைத்தியரின் கையொப்பம்.
(ஏற்றுமதி செய்யும் நாடு)

அதிகாரம் பெற்ற விலங்கு வைத்தியரின் பெயரும் முகவரியும்.

---

---

அலுவலக முத்திரை :
தேதி :

*(பொருத்தமற்றவற்றை கீறிவிடுக)

மூன்றும் அட்டவணை [பிரிவுகள் 26(2), 33(2), 34(3)]

விலங்குகளினதும், விலங்குகளின் ஆண் கருவின் அல்லது மூலக்கருவின் இறக்குமதிக்கான/ஏற்றுமதிக்கான/விலங்கினக் காட்சிச்சாலை சுகாதாரச் சான்றிதழ்.

1. ஏற்றுமதி செய்யும்/இறக்குமதி செய்யும் நாடு :————.

2. ஏற்றுமதியாளரின் பெயர் :————.

3. ஏற்றுமதியாளரின் முகவரி :————.

4. விலங்குகளின் ஆண்கருவின்/மூலக்கருவின் உற்பத்தித்தானம் :————

(I) விலங்குகளின் அடையாளமறிதல் (உயிருடனுள்ள விலங்கொன்றின் இறக்குமதி/ஏற்றுமதி விடயத்தில்)

1. அடையாளமறியும் இலக்கம் அல்லது குறி :————.

2. உயிரினவகை :————.

3. அடையாளக்குறி :————.

4. பால் :———— .

5. வயது :————

(II) நன்கொடை விலங்கு தொடர்பான விபரங்கள் (ஆண்கருவின் அல்லது மூலக்கருவின் இறக்குமதி/ஏற்றுமதி விடயத்தில்)

1. உயிரின வகை :———.

2. அடையாளக்குறி :———.

3. இனங்காணல் :———.

4. பிறந்த தேதி :———.

5. பிறந்த இடம் :———.

6. செ. க./முட்டைக் கருவுயிர் மாற்ற நோக்கங்களுக்காக விலங்கிற்கு அங்கீகாரம் பெறப்பட்ட தேதி :——— .

(III) ஆண்கரு அல்லது மூலக்கரு தொடர்பான விபரங்கள்.

1. சேகரிப்புத் தேதியும் நேரமும் :———.

2. ஆண்கருவின்/மூலக்கருவின் அளவும் பொதியிலிடப்பட்டமையும்;———.

(IV) விலங்கு/ஆண்கரு/மூலக்கரு சென்றடையுமிடம்

1. சென்றடையும் நாடு :———.

2. அனுப்பும் பொருள் பெறுநரின் பெயரும் முகவரியும் :———.

3. போக்குவரத்தின் தன்மையும் வழியும் :———.

(V) சுகாதாரத்தகவல்

கீழ் ஒப்பமிட்ட அதிகாரமளிக்கப்பட்ட விலங்கு வைத்தியர் பின்வருமாறு அத்தாட்சிப்படுத்துகின்றார் :—

(அ) உயிருடனான விலங்கொன்றின் இறக்குமதி/ஏற்றுமதி விடயத்தில் :

1. மேலே விவரிக்கப்பட்டதும் இந்நாளன்று பரீட்சிக்கப்பட்டதுமான விலங்கு, பிணிநிலையம் சார்ந்த நோயின் அறிகுறி எதனையும் காண்பிக்கவில்லை.

2. இவ்விலங்கு, ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன்னரான மூன்று மாதங்களைக்கொண்ட காலத்தில், நோய்வாய்ப்பட்ட விலங்குகளுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை.

3. இவ்விலங்கு, பின்வருமாறு நோய்த்தடுப்பு செய்யப்பட்டுள்ளது.

(அ) ——— எதிராக ——— தேதியன்று

(ஆ) ——— எதிராக ——— தேதியன்று

(இ) ——— எதிராக ——— தேதியன்று

(ஈ) ——— எதிராக ——— தேதியன்று

(உ) ——— எதிராக ——— தேதியன்று

4. எந்த வளர்ப்பு நிலையத்திலிருந்து அல்லது பண்ணையிலிருந்து விலங்குகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவோ அந்த வளர்ப்பு நிலையம் அல்லது பண்ணை அங்கீகரிக்கப்பட்டுள்ளது அத்துடன் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்பு மூன்று மாதங்களின்போது நோய் எதுவும் இல்லாது இருந்துள்ளது.

5. பெற்றோர் விலங்குத் தொகுதி/விலங்கு நோய்களுக்கெதிராக பரீட்சிக்கப்பட்டது.

(ஆ) ஆண்கருவின் அல்லது மூலக்கருவின் இறக்குமதி/ஏற்றுமதி விடயத்தில் :

(i) ஆண்கரு/மூலக்கரு சேகரிக்கப்பட்ட நாளன்று, நன்கொடை விலங்கு பிணிநிலையம் சார்ந்த நோயின் அறிகுறி எதனையும் காண்பிக்கவில்லை.

(ii) ஆண்கரு/மூலக்கரு சேகரிக்கப்படுவதற்கு முன்னரான மூன்று மாத காலத்தில், நன்கொடை விலங்கானது, நோவாய்ப்பட்ட விலங்குகளுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை.

(இ) விசேட அறிக்கை பற்றிய வேறு எவையேனும் விபரங்கள் :

அதிகாரமளிக்கப்பட்ட விலங்கு வைத்தியரின் ஒப்பம்
(ஏற்றுமதி செய்யும் நாடு)

அதிகாரமளிக்கப்பட்ட விலங்கு வைத்தியரின்
பெயரும் முகவரியும்.

அலுவலக முத்திரை :
தேதி :

*(பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக)